
சரணம் ஐயப்பா!

கடைசி குழந்தை பிறந்த பிறகு, என் அம்மாவின் ஆரோக்கியம் சற்று தளர்ந்தது; ஒருவித நரம்பு தளர்ச்சி, பொதுவான பலஹீனம் எல்லாம் சேர்ந்து கொண்டன. ஆனாலும் அம்மா சோர்ந்து விடவில்லை!

அப்போது அப்பாவுக்கு ஏ.வி.எம் நிறுவனத்தில் டைபிஸ்ட் வேலை! ஊதியம் குறைவு. மனைவியின் உடல்நிலை, குழந்தைகளின் படிப்பு மற்றும் தேவைகள் வறுமையில் துவண்டு போனார் அப்பா! இவர் முகச் சோர்வு கண்டு, இவரது மேலதிகாரி, திரு சுந்தரேசய்யர் "ஜெயராமா, என்னோட சபரிக்கு ஒருதரம் வா; அவன் பார்த்துப்பான்" என்றார். அப்பாவுக்கும் விருப்பம் தான்; ஆனால் முடியுமா? அவன் அருட்பார்வை படும் நேரம் வந்துவிட்டால், யாராவது மனித ரூபத்தில் அவனே அதனை சாதித்து விடுவான்,

சுந்தரேச குருசுவாமி பல வருடங்களாகப் பெரிய பாதையில் சென்று, எருமேலியிலிருந்து, காளைகட்டி, அழுதை மலை, கரிமலை, நீலிமலை ஏறி இறங்கி, நாற்பத்தி எட்டு மைல் கால்நடையாக சபரிமலை செல்வது ஐயப்பன் தரிசனம் கண்டு வருபவர். அப்பாவையும் தன்னுடன் அழைத்துச் சென்றார். ஐயன் தரிசனம் கண்டு வந்த அப்பாவின் முகத்தில் மகிழ்ச்சி, தன்னம்பிக்கை, இன்னும் அதிக முனைப்பு! விடியலின் வெளிச்சம் மெல்ல எங்கள் மீது பரவியது. அது அவனது அருட்ஜோதியின் சிறிய கீற்று! பின்னர் நடந்தவையெல்லாம் நல்லவையே. தொடர்ந்து பதினெட்டு வருடங்கள் பெரிய பாதையிலேயே சபரி மலை சென்று வந்தார் அப்பா. உடன் ஒவ்வொரு வருடமும் ஒவ்வொருவராக எங்கள் குடும்பத்தில் எல்லோருமே சபரி செல்ல ஆரம்பித்தோம்!

இதற்குள் அம்மா ஓரளவு தேறி, தங்கைகள் திருமணம், தம்பிகளின் உபநயனம் என கடமைகள் எல்லாம் முடித்தாள். அப்பா பத்தொன்பதாவது மலை சென்று, திரும்பி வந்த மூன்றாம் மாதம் அம்மா சத்தமின்றி ஓரிரவில் எங்களைப் பிரிந்தாள். தலையில் கட்டி அதிகம் துன்புறாமல், வாழ்வின்



சுவாமியே சரணம் ஐயப்பா!

சுகங்கள் ஏதுமின்றி, கடமைகளை முடித்து எப்போதும் அழைக்கும் 'ஐயப்பா' என்று மட்டும் கூவி, அவனுடன் காற்றில் கரைந்தாள். பதினெட்டு வருடங்கள் பதினெட்டு படிகள் நிறைவடையும் வரை எந்த ஒரு பிரச்சனையுமின்றி தலையில் கட்டியுருவில் காலன் தயாராய் காத்திருந்தபோதும் வலம் வந்த அவளைக் காத்தது எது? கடமைகள் முடிந்தவுடன் அழைத்துக் கொண்டது எது? வாழ்வில் சில ரகசியங்கள் இப்படி காரணம் தெரியாமலே காற்றில் சுற்றிவரும். அவன் அருட்பார்வை தவிர இதற்கு வேறு விளக்கம் ஏதேனும் இருக்கமுடியுமா? அவளது 'வன்புலி வாகனனே'வையும், 'ஐயப்பனைக் காண வாரீரை'யும் கேட்டு, மகிழ்ந்து, பதினெட்டு வருடங்கள் தாயென்னும் நிழலை எங்களுக்குப் போர்த்தி, காத்தது அவன் கருணையின்றி வேறென்ன?

முதல் நாள் முதல், அப்பாவுடன் துணையாக வந்து வழிகாட்டி, சுந்தரேச குருசுவாமிக்குப் பிறகு, எங்களை மலைக்கு அழைத்துச் சென்று, எங்கள் மனத்திலும், பக்தியிலும் கலந்து விட்ட ஈ.எஸ்.கே என்னும் கிருஷ்ணன் குருசுவாமி, ஐயப்பனே அவரது மூச்சு, பேச்சு, வாக்கு, செயல் எல்லாம். முப்பதுக்கும் அதிகமான வருடங்கள் எங்களை வழி நடத்திச் சென்றார். அவர் ஒரு மாமனிதர். எல்லோரும் குடும்பமாகச் செல்கிறோம். எங்கள் முன்னேற்றம் முழுமையானதற்குக் காரணமே, ஸ்ரீதர்மசாஸ்தாவின் அருட்கடாக்ஷமே என்பதில் எந்தவித ஐயமுமில்லை. உண்மையான உழைப்பு, உழைப்பதற்கொரு வாய்ப்பு, அதன் பலன் எல்லாம் உள்ளம் நிறைந்த பக்தியினாலும், நம்பிக்கையினாலும் மட்டுமே கிடைத்தன.

சீசனில் கூட்டம். நிற்கக் கூட முடியாத நெரிசல். உடன்வரும் முதியோர் கருதி இப்போதெல்லாம் மாதாந்திர பூஜைக்காக கோயில் திறக்கும் நாட்களில் போய் வருகிறோம். இப்போதும் கூட்டமும், நெரிசலும் உண்டுதான். ஆனாலும் நின்று, நிதானித்தால், சன்னிதியில் ஐயப்பன் சாந்நித்தியமாய் அமர்ந்திருப்பதைக் காணலாம்! எங்கள் குழுவில் அறுபதுக்கும் மேல் வயதான ஆண்களும், பெண்களும் உண்டு. அனைவரும் ஒரு குடும்பமாய்ச் சென்று, இரண்டு தினங்கள் சபரிமலையில் தங்கி, ஐயன் தரிசனம் கண்டு வருவது, ஒரு பக்தி மிகுந்த சுகானுபவம்! காலையில் நெய்யபிஷேகமும், மாலையில் புஷ்பாஞ்சலியும் மனதுக்கு நிறைவானவை. சர விளக்குகளின் ஒளியில், தங்கக் கவசம் ஜொலிக்க, பின்னால் பிரபையும், கழுத்தில் மாலையும், தலையில் கிரீடமும் அணிந்து பத்மாசனம் போட்டு அமர்ந்திருக்கும் குழந்தை, நம்மைப் பார்த்துப் புன்னகைக்கும் அழகுக்கு ஈடு ஏது?.

ஜாதி வேறுபாடில்லாமல், ஏழை பணக்காரன் பேதமில்லாமல், ஐயன் அருள் ஒன்றையே நாடிச் செல்வோருக்கு, அவன் கடைக்கண் பார்வை நிச்சயம் உண்டு.

அகஸ்தியர் கோவிலும் இராமகிருஷ்ணா பள்ளியும்...

வெகு நாட்களுக்குப் பிறகு, திநகரில் உள்ள அகத்தியர் கோயிலுக்குச் சென்றிருந்தேன். பள்ளி, கல்லூரி நாட்களில் கோயிலுக்கு எதிர் வீட்டில் ஒண்டுக் குடித்தனம். இப்போது அங்கு ஒரு பெரிய அடுக்கு மாடிக் கட்டிடம், சுற்றியிருந்த மரங்களை விழுங்கிய கான்கிரீட் தரையின் மேல் விஸ்வரூபம் எடுத்த கடோத்கஜனைப் போல் நின்று கொண்டிருந்தது!

அப்போது அந்தக் கோயில் தனியார் வசம் இருந்தது - சித்தி, புத்தி சமேத கணபதி, நவக்கிரக சந்நிதி (எல்லா கிரக மூர்த்தங்களும் அவரவர் வாகனங்களில் வீற்றிருப்பது விசேஷம்), வள்ளி தேவசேனா சமேத சுப்ரமணியர் சந்நிதி, சிவன் சுந்தரவணிபேஸ்வரர் மற்றும் சுந்தரவடிவாம்பிகை அம்பாள் சந்நிதி, தென்மேற்கு மூலையில் நாகர், நடுவில் தட்ஷிணாமூர்த்தி, பின்னர் சண்டிகேஸ்வரர் - இவ்வளவுதான். முன்பக்கம் பெரிய வில்வமரம், அதனடியில் இரண்டு படிக்கட்டுகள் இறங்கும் பெரிய சிமெண்ட் தொட்டி, அதில் எப்போதும் தண்ணீர்! மரத்திலிருந்து விழும் விதை நீரில் விழுந்து வெடிப்பது அன்று அழகாகவும், வேடிக்கையாகவும் இருந்தது!

அன்றைய பல பிரபலங்கள் - முக்கியமாக சினிமாக் கலைஞர்கள் கோயிலுக்கு வருவது எங்களுக்கு நல்ல பொழுதுபோக்கு! மறைந்த முதல்வர் ஜெயலலிதா, வில்லன் மனோகர், 'டணால்' தங்கவேலு, சுப்பு ஆறுமுகம்

(அன்றைய வசனகர்த்தா, இன்றைய வில்லுப்பாட்டுக் கலைஞர்), எனப் பல முன்னணி நட்சத்திரங்கள் வருவதுண்டு! 'மெட்ராஸ்' வரும்போதெல்லாம் 'அமிதாப்' இந்தக் கோயிலுக்குத் தவறாமல் வருவது வழக்கம். தினமும் அதிகாலை கோயில் பிரகாரங்களுக்கும், சந்நிதிகளுக்கும் நீர் தெளித்துக் கோலமிடுவதும், பாட்டுப் பாடுவதும் தன் வாழ்க்கையின் பிரதான வரமாக எண்ணிச் செய்வார் என் அம்மா! நாள் தவறாமல் காலையும், மாலையும் கோயிலுக்குச் செல்வார் என் தந்தை - அவர்களின் புண்ணிய பலனை இன்று அவர்கள் குழந்தைகள் நாங்கள் அனுபவித்து வருகிறோம்!

இன்று அகத்தியர் கோயில் அரசின் அறத்துறை பராமரிப்பில் - முகப்பு வாசலில் கோபுரம், துர்க்கை, லக்ஷ்மி நாராயணர், சுதர்ஷன / நரசிம்மர், ஆஞ்சனேயர், காலபைரவர் மற்றும் ஐயப்பன் எனப் பல புதிய சந்நிதிகள் - வில்வமரம் சிமெண்ட் மேற்கூரையைப் பொத்துக்கொண்டு கிளைகளை இழந்து வெறும் மரமாய் - நீர்த்தொட்டி மூடப்பட்டு, எங்கும் கிரானைட் தரை பளபளப்பாய் - வளமாய் இருக்கிறது.

சுற்றிவந்து விநாயகர் சன்னிதியின் அழகிய சிற்பங்களுக்கு அடியில் அமைதியாய் அமர்ந்து கொண்டேன் - பழைய நினைவுகள் மனதில் தென்றலாய்ச் சுழன்றன. 'அய்யா, இங்கெ உட்காராதீங்க' - குரல் கேட்டு எழுந்து வெளியே வந்தேன். 'எந்தையும் தாயும் மகிழ்ந்து குலாவி' வணங்கியதும், நாங்கள் ஓடி விளையாடியதும் இந்தக் கோயிலில்தான்!

சிதம்பரத்தில் பாட்டி வீட்டில் நான் படித்தது, மாலைகட்டித் தெரு முனிசிபாலிடி நடுநிலைப் பள்ளியில். எட்டாவது வரைதான் அங்கு படிப்பு; பின்னர் தி.நகர் இராமகிருஷ்ணா மிஷன் உயர்நிலைப் பள்ளியில் (மெயின் பிராஞ்ச்), ஒன்பதாவது முதல், எஸ்.எஸ்.எல்.சி வரை தமிழ் மீடியத்தில் படிப்பு.

சிதம்பரம் பள்ளியில், பெரிய ஹாலில், மர ஸ்கிரீன்களால் தடுக்கப்பட்ட வகுப்பறைகள், எல்லா பாடங்களுக்கும் ஒரே ஆசிரியர் என்பது மாறி, பெரிய வகுப்பறைகள், காற்றோட்டமான சன்னல்கள், மூன்று பேர் உட்காரக் கூடிய டெஸ்க்குகள், எதிரே சுவற்றுடன் ஒட்டிய 70 எம் எம் திரை அளவில் பெரிய கருப்பு போர்டு, முக்கால் மணிக்கொரு முறை பாடத்திற்கேற்ப மாறும் ஆசிரியர்கள் என மலைப்பாயும், கொஞ்சம் பயமாயும் இருந்தது. மூன்று கால் மரச்சட்டத்தில் சாய்வாய் நிறுத்தி வைக்கப்பட்ட சின்ன கருப்பு போர்டும், இரைச்சலான சூழ்நிலையும் ஸ்நேகமாய் இருந்ததாய்த் தோன்றியது!

நாங்கள் வாழ்ந்த அன்றைய ராஜாத் தெரு விசாலமாய் இருந்தது! எல்லாம்

தனி வீடுகள் - சில வீடுகளில் அதிகபட்சம் ஒரு மாடி - மற்றவை எல்லாம் அழகான மொட்டை மாடிகளுடன்!

மாமரங்கள், தென்னை மரங்கள், வேப்ப மரங்கள், என் வீட்டிலிருந்த ஒரே பின்னை மரம், தொட்டிகளில் 'குரோட்டன்ஸ்' செடிகள் எல்லா வீடுகளையும் குளிர்வித்து, அலங்கரித்தன. வீடுகளைச் சுற்றி பத்து அல்லது பதினைந்து அடி இடம் விட்டு காம்பவுண்ட் சுவர்கள். ஏழாம் நம்பர் டாக்டர் வீடும், எதிர்வரிசை பதினோராம் நம்பர் வினாயக முதலியார் வீடும், பதிமூன்றாம் நம்பர் அப்பாராவ் வீடும், பழைய தமிழ் சினிமாக்களில் வரும் பங்களாக்களைப் போல், பெரிய போர்டிகோ, பால்கனி, உயரமான ஃப்ரண்ட் எலிவேஷன் என அழகாக இருக்கும்.

வீட்டிற்கு இரண்டு அல்லது மூன்று (எங்கள் வீட்டில் மற்ற குடித்தனங்களையும் சேர்த்து ஐந்தாறு!) டீனேஜ் அரை நிஜார்களும், பாவாடை சட்டைகளும் தேறும் - ஓரிரண்டு முக்கால் பேண்ட், பாவாடை தாவணிகளும் அவ்வப்போது சேரும்! விடுமுறை நாட்களில் ஒரே ஆட்டம், பாட்டம், விளையாட்டுதான். அறுநெல்லிக்காய், கொய்யாக்காய், மாங்காய் என உப்பு, மிளகாய்ப் பொடியுடன் அரட்டைக்குத் துணையாய் சூரையாடப்படும் (சில நேரங்களில் வீட்டுப் பெரிசுகளுக்குத் தெரியாமல்!).

தெருவில் கிரிக்கெட் ஆடி, மட்டையிலிருந்து எகிறிய பந்து, அகத்தியர் கோயில் காம்பவுண்ட் தாண்டி, வெளிப் பிரகார டியூப் லைட்டை சுக்கலாக்க, பின்னர் வந்த திட்டுகளும், கண்டனங்களும் இன்னும் காதுகளில் தேனாய்ப் பாய்கின்றன! கையிலிருந்த சில்லறையெல்லாம் போட்டு, ஆறு ரூபாயோ எட்டு ரூபாயோ புது டியூப் வாங்க நாங்க பட்டபாடு - நினைத்தாலே இனிக்கும்! அன்று இராமகிருஷ்ணா பள்ளியில் படிப்பது பெருமைக்குரிய விஷயம். எட்டாம் வகுப்பு பாஸ் செய்து டிசியுடன் வந்த என்னை அம்மாதான் பள்ளிக்கு அழைத்துச் சென்றாள். எச்.எம், திரு சுவாமினாத அய்யர் - 'பளிச்' சென்று வெள்ளைப் பட்டு ஜிப்பா, பஞ்சகச்ச வேட்டி, பிறைச் சந்திர வடிவில் நெற்றியில் கோபிச் சந்தனம், சற்றே குள்ளம் - அவரைப் பார்த்தாலே எங்களுக்கெல்லாம் பயம் - ஸ்ட்ரிக்ட் டிசிப்லினெரியன்!

பியூன் தள்ளுக் கதவைத் திறந்து விட, தலை நிமிர்த்தி, 'என்ன வேண்டும்?' என்பதான ஒரு பார்வை. போர்த்திய தலைப்புடன் அம்மா - 'இவன் என் இரண்டாவது பிள்ளை. இவனோட அண்ணனும், தம்பியும் இங்கேதான் படிக்கிறாங்க. சிதம்பரத்தில் எட்டாவது பாஸ். ஒன்பதாவதுக்கு ஒரு சீட் வேணும். டி.சி வாங்கிண்டு வந்துட்டேன்'

'நன்னா படிப்பானா?', 'இதோ மார்க் ஷீட்'

என்னை ஏற இறங்க ஒரு முறை பார்த்தபடி (இவனா? என்பதுபோல), காலிங் பெல்லைத் தட்ட, உள்பக்கத் தள்ளு கதவைத் திறந்து கொண்டு வந்தவர் ராகவையா - ஆபீஸ் ஸ்டாஃப் - பள்ளிக்கூட ரூல்ஸ், ரெகுலேஷன்ஸ் எல்லாம் விரல் நுனியில் அத்துப்படி. சுமார் அழுக்கான நீலக் கலர் டெரிலீன் சட்டை, கணுக்கால் வரை தூக்கிக் கட்டிய பழுப்பு வேட்டி, இடது புறம் தாங்கியபடி நடை, ஒரு செ.மீ க்கும் குறைவாக வெட்டப்பட்ட தலைமுடிகள், வெற்று நெற்றி - மறக்க முடியாதவர்.

'இது நல்ல ஸ்கூலா?' - எச்.எம்.

'முனிசிபல் ஹையர் செகண்ட்ரி ஸ்கூல் - கவர்ன்மெண்ட் ஸ்கூல் மாதிரி சார். ப்ராப்ளமே இல்லாமெ எடுத்துக்கலாம். மார்க் வேறெ எல்லாத்துலேயும் எண்பதுக்கும் மேலே' - ராகவையா.

மேஜை டிராவைத் திறந்து, ஒரு பச்சை நிற அப்ளிகேஷன் ஃபார்ம் கொடுத்தார். அதன் தலையில், சிவப்பு இங்க் ல், IX 'L' என்று எழுதினார். 'பூர்த்தி பண்ணிக் கொடுத்துவிட்டு, ...ரூபாய் (ஆறோ, பத்தோ ரூபாய் நினைவிலில்லை) கட்டிட்டுப்போங்கோ' என்றவர் என்னைப் பார்த்து, 'ஒழுங்காப் படிக்கணும்' என்று தலையசைத்து வெளியே அனுப்பிவைத்தார்.

இன்று 'ப்ரீ கேஜி' க்கும், 'ப்ளஸ் ஒன்' க்கும், காலையில் இருள் பிரியும்முன் திருப்பதி பாலாஜி தரிசனத்துக்கு நிற்பது போல் கியூவுல மணிக்கணக்கில் நிற்க வேண்டியிருக்கிறது. கூடவே, அப்பா, அம்மா படிச்சிருக்கணும், வீடு ஸ்கூலுக்குப் பக்கத்திலேயே இருக்கணும், டொனேஷன் கொடுக்கணும், அதைவிட அதிகமா பீஸ் கட்டணும். இருந்தாலும் சீட் நிச்சயமில்லெ!

அப்போதும் அரசுப் பள்ளிகள், கார்ப்பொரேஷன் பள்ளிகள், தனியார் பள்ளிகள் (கான்வெண்ட்ஸ்) எல்லாமும் இருந்தன. ஆசிரியர், மாணவர் உறவு மெச்சத் தகுந்ததாயும், உணர்வு பூர்வமானதாயும் இருந்தது. ஒழுக்கம், அன்பு, அடக்கம், மரியாதை, தேசப்பற்று இன்னபிற நல்லவைகளும் பாடங்களுடன் சேர்ந்தே போதிக்கப்பட்டன. நீதி போதனை (MORAL CLASS), ஓவியம் மற்றும் கிராஃப்ட்ஸ், வகுப்புகள் இப்போது இருக்கின்றனவா தெரியவில்லை.

இப்போது நினைத்தாலும் இனிக்கின்றது இளமைக்காலம் - அது ஒரு கனாக் காலம்!



பொங்கலோ பொங்கல்!

"சூழன்றும் ஏர்ப் பின்னது உலகம் அதனால்
உழந்தும் உழவே தலை".

என்பதற்கேற்ப உழவுத்தொழிலே உலகின் தலையாய தொழில். உழவின்றி மனித இனம், சோறின்றி அழிய வேண்டியதுதான்.

உழவுக்கு முக்கியமானது நீர்; அதை வாரி வழங்குவது வான்மழை; அந்த மழை வரக் காரணம் சூரியன் !

நிலத்தை உழுபவனுக்குத் தேவை ஏர், அதில் பூட்டி இழுக்கக் காளை மாடுகள்.

வயல்களை உழுது, ஆடிப்பட்டம் தேடி விதைத்து, நாற்றுக்களைப் பிடுங்கி நட்டு, களை எடுத்து, நீர் பாய்ச்சி, தையில் அறுவடை செய்து, தாளடித்து, மூட்டைகளில் நெல் நிரப்பி, ஊரெங்கும் தாராளமாய் வழங்கும் உழவனுக்கும், அவனது தொழிலுக்கு உதவிய அனைத்து இயற்கை வளங்களுக்கும் நன்றி சொல்ல ஏற்பட்டதுதான் 'பொங்கல் திருவிழா' !

இன்னும் பத்து, பதினைந்து வருடங்களுக்குப் பின், "மேலே கூறியவையெல்லாம் என்ன?" என்று கேள்வி கேட்கும் இளைய சமுதாயம் உருவாகி வருவது எதிர்கால இந்தியாவுக்கு நல்லது அல்ல. அரிசிக்கும், பருப்புக்கும்,

கோதுமைக்கும் அயல்நாடுகளில் கையேந்தும் நிலை வந்து விடக்கூடிய அபாயம் கண்ணெதிரில் தெரிகிறது.

ஐப்பசி, கார்த்திகை மழை முடிந்தவுடன், ஊருக்குள் வீடுகள் சுத்தம் செய்யப்பட்டு, சுவர்களுக்கு வெள்ளையடிப்பது சுண்ணாம்பு கிளிஞ்சல் களிலிருந்து தயாரிக்கப்படும், வெள்ளை அல்லது 'கோபி' எனப்படும் மஞ் சள் நிற சுவர்ப்பூச்சு மரச்சட்டங்கள், தூண்களுக்கு வர்ணம் அடிப்பது தைப்பொங்கல் வருவதின் முதல் அறி குறி! (இன்றைக்கு டிவி விளம்பரங்களில், கண்கவர் வண்ணங்களில் வீடுகளுக்கு அடிக்கப்படும் பிளாஸ்டிக் எமல்ஷன் வசீகரங்கள் அன்று வழக்கில் இல்லை!)

பொங்கலுக்கு முதல் நாள் 'போகி'ப் பண்டிகை. பழையன கழிதலும், புதியன புகுதலும் என, பழைய துணிகள், மரச்சாமான்கள் மற்றும் தேவை யில்லாதவற்றை, விடியற்காலையில் தெருவிலிட்டு எரித்து விடுவர். சிறுவர்களும், சிறுமிகளும் சுற்றி நின்று, தப்பட்டை, பறை, தமுக்கு, உடுக்கை அடித்து, ஒலி எழுப்பி ஆரவாரம் செய்வர் பாடுவதும், ஆடுவதும் உண்டு!

மார்கழியின் கடைசி நாள் பனிப் பொழிவா, பழையன எரிந்த புகையா என்று தெரியாத அளவுக்குக் கரும் மூட்டமாக இருக்கும். சூரியன் எட்டிப் பார்க்க, இருள் விலகி விடும், மன இருளும் தான்.

மேகங்களுக்கு அதிபதியான இந்திரனுக்கு மரியாதை செய்வதான ஓர் ஐதீகமும் இந்நாளைப் பற்றி இங்கு நிலவுகிறது!

(இன்று காரணம் தெரியாமல், டயர் மற்றும் பிளாஸ்டிக் பொருட்களை எரித்து, போகி கொண்டாடுகிறோம் என்று, சுற்றுச் சூழலை மாசுபடுத்துவது அறியாமை. இதனால் போகிப் பண்டிகையே கூடாது என்பது, நாம் நம் பண்பாட்டு உன்னதங்களை இழந்து வருகிறோம் என்பதின் வெளிப்பாடு).

இரண்டாம் நாள் பொங்கல் திருநாள்!

எல்லா வளங்களும் பெற்று, எங்கும் இன்பம் பொங்க வேண்டும்! நெல்லும், கரும்பும், தானியங்களும், மஞ்சளும், இஞ்சியும் அறுவடை செய்து, பெற்ற வளங்களுடன் பொங்கல் வைத்துச் சூரியனுக்கு நன்றி சொல்லும் நாள்!

கிராமங்களில் அறுவடை முடிந்த வயல்களிலும், வெட்ட வெளிகளிலும், செங்கல் அடுப்பு வைத்து, அலங்கரிக்கப்பட்ட மண்பானைகளில் புதுப் பச்சை அரி

சியைப் பாலில் வேகவைத்து, வெல்லமும், சர்க்கரையும் சேர்த்து, பொங்குகின்ற பொங்கலில் மன மகிழ்ச்சியைக் காணும்நாள்! கரும்புக் கட்டுகளையும், மஞ்சள், இஞ்சிக் கொத்துகளையும் சுற்றிலும் வைத்துச் சூரியனுக்குப் படையல்!

மகர சங்கராந்தி. சூரியன் ஒரு ராசி விட்டு அடுத்த ராசிக்குள் செல்வது சங்கராந்தி! மகர ராசிக்குள் புகும் நாள் மகர சங்கராந்தி! வருடா வருடம் அதே நாளில் ஜனவரி 14 அல்லது 15 வரும் (எட்டு வருடங்களுக்கு ஒரு முறை பூமியின் சுழற்சியால், ஒரு நாள் தள்ளி வரும் 14க்கு பதில் 15ம் தேதி). இந்தியா முழுவதிலும் இது அறுவடைப் பண்டிகை. மேற்கே மகர சங்க்ராந்தி, தெற்கே பொங்கல், வடக்கே லோஹ்ரி, உத்தராண்யா, மாகி, கிச்டி எனப் பல பெயர்களில் கொண்டாடப்படுகிறது.

தை மாதம் பிறக்கும் நேரத்தில் பொங்கல் பொங்க வேண்டும் என்பது மரபு. வீடுகளில் நன்கு மெழுகி, கோலமிடப்பட்ட அடுப்புகளில், வெண்கலப் பானைகளுக்கு சந்தனம், குங்குமம் இட்டு, கழுத்தில் மஞ்சள், இஞ்சிக் கொத்துகளை மாலையாகக் கட்டி, அரிசியும் பாலும் பொங்கி வரும் நேரம், மேலும் கொஞ்சம் பாலை அதில் வார்த்து, 'பொங்கலோ பொங்கல்' என்று ஆரவாரமாய்ச் சத்தமிட்டுக் கையில் பறை, தப்பட்டை முழங்க (இது இல்லாதவர்கள், எவர்சில்வர் தட்டும், கரண்டியும் கொண்டு ஒலி எழுப்புவர் மாடர்ன் பறை!) நன்றியுடன் பொங்கல் கொண்டாடுவர்!

வானம் பார்த்த முற்றத்தில், இழை மாவு, காவி இவற்றால் 'தேர்'க் கோலம் இட்டு, அதில் சூரியனையும், சந்திரனையும் வரைந்து, கஸ்தூரி மஞ்சளில் இரண்டு உருவம் செய்து சூரியனாயும், சந்திரனாயும் பாவித்து, பூஜை செய்து, பொங்கல், பாயசம், கரும்பு, தேங்காய், பழம், வெற்றிலை, பாக்கு நெய்வேத்தியம் செய்வது வழக்கம்!

இன்றும் கிராமங்களில் கன்னிப்பெண்கள், புத்தாடை உடுத்தி, வரிசையாகத் தங்கள் வீட்டு வாசலில் பொங்கல் வைத்து ஆடிப்பாடிக் கொண்டாடுவதைக் காணலாம். புதிய வேட்டி, சட்டைகளில் இளவட்டங்கள் அங்கே சுற்றி வருவது களிப்பூட்டும் பொங்கல்! (இளையராஜா கிராமீய இசையில், தமிழ்ப் படக் கிராமங்களில் இப்படிப்பட்ட ஒரு காட்சியை மனதில் ஓட்டிப்பார்க்கலாம்!).

மூன்றாம் நாள் மாட்டுப் பொங்கல்!

விவசாயியின் உற்ற தோழன், ஏரில் பூட்டப்படும் காளைகளும், வீட்டில் கட்டப்படும் கறவைப் பசுக்களும்தான்! அவைகளுக்கு நன்றி, மாட்டுப்பொங்கல்!

மாடுகளை நன்கு குளிப்பாட்டி, மஞ்சள், குங்குமம் இட்டு, கொம்புகளுக்கு வர்ணங்கள் பூசி (கட்சிக்கேற்ற, இரண்டு, மூன்று வர்ணங்களும் பூசுவதுண்டு!), கழுத்தில் பல வண்ணங்களில் 'நெட்டி' மாலை (நெட்டி, இன்றைய தெர்மகோல் போலிருக்கும்) சூட்டி, பசுக்களைப் பூஜித்து, பொங்கல், கரும்பு, வாழைப்பழம் எல்லாம் படைக்கப்படும்.

நகரங்களில் அங்கொன்றும் இங்கொன்றுமாய் அலங்கரிக்கப்பட்ட கட்டை வண்டிகளில் பூக்கள், மாலைகள், கரும்பு, இளநீர், பலூான்கள் எல்லாம் கட்டப்பட்ட அலங்கார வண்டிகள் மாலைகளும், மணிகளும் கழுத்தில் தொங்க, மாடுகள் பூட்டப்பட்டு ஊர்வலம் செல்வர் சிலர்! கிராமங்களில் காளை அடக்குதல், காளை விரட்டுதல் போன்ற வீர விளையாட்டுக்களில், இளைஞர்கள், தம் உயிரைப் பணயம் வைத்து, வீரம் காட்டுவர்.

அலங்கார மாடுகள், மஞ்சள் நீர் தெளித்து, கூட்டமாக ஓட்டப்படுவது 'மஞ்சுவிரட்டு' சில நடக்கும், சில ஓடும், சில துள்ளும், குறுக்கே ஓடும் கன்றுக் குட்டிகள் அக்கிரகாரத் திண்ணையில், மரத் தூணைப் பிடித்தபடி, மிரட்சியுடன் பார்த்த மஞ்சுவிரட்டு இன்னும் பசுமையாய் மனத்திரையில் ஓடுகிறது.

நான்காம் நாள் 'காணும் பொங்கல்!'

உறவினர்களையும், நண்பர்களையும் கண்டு, மகிழ்ந்து வருவதால், 'காணும்' பொங்கல்! பறவைகளுக்கும், உடன் பிறந்த சகோதரர்களுக்கும், தன் வீட்டு ஆடவர்களுக்குமான நாளாகவும் கொண்டாடப்படுகிறது.

வீட்டிலுள்ள பெண்கள் எல்லாம், விடியல் காலையில், குளிக்கும் முன்பு, வெட்ட வெளியில், (இப்போதெல்லாம் மொட்டை மாடியில்), மஞ்சள் அல்லது வாழை இலையில், பல வண்ணக் கலந்த சாதங்கள், கரும்பு, வாழைப்பழம், வெல்லம் எல்லாம் வைத்து வழிபடுவர். இந்த நாளுக்காகவே, சகோதரன் அனுப்பும் 'பொங்கல்பணம்' பிறந்த வீட்டு சீதனம் பாசத்துடன் எதிர் பார்க்கப்படும். பாங்க் அக்கவுண்ட் டிரான்ஸ்ஃபர் எல்லாம் கிடையாது. மணியார்டர் தான்! அதை வாங்கிக் கொள்ளும் மகளிரின் ஆனந்தத்துக்கு எல்லையே இல்லை.

மக்கள் கூட்டம் கூட்டமாக, மகிழ்ச்சியுடன் ஆற்றங்கரை (சென்னையில் கடற்கரை), கோயில், குளம் எனச் சுற்றி வருவர். கேலிக்கும், கேளிக்கைகளுக்கும் குறைவே இருக்காது!

அறம், பொருள், இன்பம் போற்றும் தமிழ் மறையாம் திருக்குறளைக் கொண்டாடவும், திருவள்ளுவரைப் போற்றவும், 1976 ஆம் ஆண்டு முதல் இந்த நாள் தமிழகத்தில் திருவள்ளுவர் தினமாகக் கொண்டாடப்படுகிறது. திருவள்ளுவர் சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செய்தல், திருக்குறள் சொற்பொழிவுகள், விவாதங்கள், போட்டிகள், பரிசுகள் எனத் தமிழகமெங்கும் நடத்தப்படுகின்றன. பறவைகள், சகோதரர்களுக்கு மட்டுமல்ல, வாழ்க்கையில் திருக்குறள் மூலம் கற்றலும், அதனை ஒற்றி ஒழுக்கமாக வாழவும், தெளிந்த ஞானம் பெறவும் இந்த நாள் முக்கியத்துவம் பெறுகிறது.

மகர சங்கராந்தியில் சபரிமலையில் 'மகர ஜோதி' தரிசனம் கோடானுகோடி ஐயப்ப பக்தர்கள் விரதமிருந்து, ஐயப்பனையும், காந்தமலையில் மகர விளக்கினையும் தரிசித்து மகிழ்வதும் இந்த நன்னாளில்தான்!

பொங்கல் வாழ்த்துக்கள் இப்போதெல்லாம் வாட்ஸப், குறுஞ்செய்தி என்று ஆகிவிட்டது. பல வண்ணங்களில் பொங்கல் வாழ்த்துக்கள் அனுப்பிய காலங்கள் மறைந்து விட்டன. கலர் பென்சில்களால் பொங்கும் பானையும், பச்சை இலைகளுடன் இரண்டு வயலெட் கரும்புகளும், வண்டி போன்ற இரண்டு சக்கர வஸ்துவும், அதை இழுக்கும் கொம்பு வைத்த மாடுகளும் (எத்தனை முறை வரைந்தாலும் கழுத்து சிறுத்து, ஆடு முகமே வரும்!), கைப்பட எழுதிய வாழ்த்துக்களும் இன்றைய இளைஞர்கள் அறிந்திருக்க வாய்ப்பில்லை.

'பொங்கல் ரிலீஸ்' படங்கள் கூட இப்போதெல்லாம் அவ்வளவு கோலாகலமாக இல்லை!

இன்றைய பொங்கல், காலையில் கிச்சனில் குக்கரில் விசில் அடித்து, (மஞ்சள் கொத்தும், இஞ்சிக் கொத்தும் குக்கருக்குத்தான்!), சின்னத்திரையின் விசேஷ ஆடல் பாடல்கள், திரை விமர்சனம், பட்டி மன்றத்துடன் வரவேற்பறையில் முடிந்து விடுகிறது!

கரும்பு கடித்துத் துப்புவதும், நெற்றியில் மஞ்சள் தீற்றிக் கொள்வதும் இப்போது அநாசாரமாகப் போய்விட்டன!

எதிர்காலச் சந்ததியினர், மாடுகளையும், மாட்டு வண்டியையும் மியூசியத்தில் பார்த்து மகிழ வேண்டியதுதான்!

மாசி மாதமும், சாவித்திரி விரதமும்!

மாசி மாதத்துக்கென்று சில சிறப்புகள் உண்டு. மாங்கல்ய மாதம்' என்று அறியப்படும் இந்த மாதத்தில், பெண்கள் புது மாங்கல்ய சரடு கட்டிக்கொள்வது சிறப்பு!

மஹாவிஷ்ணு, பார்வதிதேவி அவதரித்த மாதம் இது. சுவாமி மலையில் முருகப் பெருமான், தந்தை சிவபெருமானுக்கே உபதேசம் செய்ததும் மாசியில்தான் - எவரும் மந்திர உபதேசம் பெறுவதற்கு ஏற்ற மாதமும் மாசிதான். அன்னதானம், அம்பிகை, சரஸ்வதி வழிபாடு, மாசிமகப் புனித நீராடல் போன்றவை மிகவும் பிரசித்தம்.

காரடையான் நோன்பும் சாவித்திரி விரதமும் விசேஷமானவை. மாசி மாதம் வந்துவிட்டாலே அம்மா 'பிசி'யாகி விடுவாள். தினமும் அகத்தியர் கோயிலில் அம்பாளுக்கும், துர்க்கைக்கும் பூஜை, பக்திப் பாடல்கள், சுமங்கலிகளுக்கு புடவை, வெற்றிலை, பாக்கு, மஞ்சள் குங்குமம், என மாங்கல்ய மாதத்தைக் கொண்டாடுவாள். அவ்வப்போது அன்னதானமும் உண்டு - தன் விருப்பங்களைப் பெற விரதம் இருந்து, அகத்தியர் அருள் பெற்றதும் மாசியில்தான் - அந்த வகையிலும் அகத்தியர் கோயில் மாசியில் மகிழும்!

மாசி முடிந்து பங்குனி தொடங்கும் நேரம், சுமங்கலிகள் தங்கள் தாலி பாக்கியம் நிலைக்க வேண்டும் என்றும்

திருமணமாகாத பெண்கள் தங்களுக்கு நல்ல கணவன் வாய்க்க வேண்டும் எனவும் வேண்டி நோன்பு இருப்பது - காரடையான் நோன்பு (சாவித்திரி விரதம், காமாட்சி விரதம் என்றும் சொல்லுவார்கள்).

"டேய், பாண்டி பசார்லெ போய் மெஷின்ல மாவு அரைச்சிண்டு வாடா - விடிஞ்சா காரடையான் நோன்பு" - எவர்சில்வர் தூக்கில் அரிசி எடுத்துப் போனது நினைவிலாடுகிறது. பாட்டி வீட்டில் அரிசி மாவு யந்திரத்தில் அரைப்பார்கள் - மிக்சிகள் சமையலறையை ஆக்ரமிக்காத காலம்! ஒரு கால் மடக்கி, மறுகால் நீட்டி, யந்திரத்தின் மத்தியில் ஒரு பிடி அரிசியைப் போட்டு, மரப்பிடியை இடமும் வலமுமாக சுற்றினால் அரிசி மாவாகி யந்திரத்தைச் சுற்றி விழுவது அழகு! பிறகு சல்லடையில் (கேள்விப் பட்டிருக்கிறீர்களா?) சலித்தால் நைஸ் அரிசி மாவு தயார்.

யந்திரம் போய், மாவு மெஷின் வந்தது - காதைக் கிழிக்கும் சத்தத்துடன், மோட்டாரால் இயங்கும். கூம்பு வடிவத்தில் தலை - மாவு விழுவதற்கு வசதியாக கீழே கட்டித் தொங்கவிடப்பட்ட தகரக் குழாய் - கைப்பிடிச் சக்கரத்தை இரண்டு முறை திருகி, தகரக் குழாயை குச்சியால் இரண்டு தட்டு தட்டினால் ஒட்டியிருக்கும் மாவு விழுவதுடன் அரைத்த மாவு ரெடி! (டேய், மினகா, சீயக்காய் அரைச்சிருந்தா, கொஞ்சம் அரிசிய அரைச்சிட்டு, பிறகு தனியா இதை அரைக்கணும்ன்னு சொல்லுடா - அம்மா!).

இப்போது அரிசி மாவு தயாராக பிளாஸ்டிக் பைகளில் கிடைக்கிறது - யந்திரம், மாவு மெஷின்கள் மறைந்து விட்டன- அவற்றுடன் நம் கலாச்சாரப் பெருமைகளும்! (இன்னும் கொஞ்ச நாட்களில், ரெடிமேட் கார அடை - உப்பு அடைகள் கிடைக்கலாம் - இப்போதே கிடைக்கிறதோ என்னவோ தெரியவில்லை!)

அம்மா வேலைக்குப் போகவில்லை - எப்போது மாதம் பிறக்கிறதோ, காலையோ, மதியமோ, மாலையோ, அப்போது நோன்பிருப்பது வழக்கம் - அன்று காலை முதல் அதுவரையில் எதுவும் சாப்பிடாமல் விரதம்! இன்று ஆபீஸ் செல்லும் பெண்களுக்கு இப்படி விரதம் இருப்பது சிரமம் - கஞ்சியோ, கூழோ குடித்துவிட்டு, நோன்பு நேரத்துக்கு வந்து விடுவது வழக்கமாகிப் போனது. இன்றைய வேகத்துக்கும், தேவைகளுக்கும் இந்த மாற்றங்கள் அவசியம்தான்!

குளித்து, மடியாகப் புத்தாடை அணிந்து, (சுமங்கலிகள் மடிசார் கட்டுவது வழக்கம் - தெரியாதவர்கள் கேட்டுத் தெரிந்து கொள்ளலாம்!), காமாட்சியின் முன்பு, நல்ல நேரத்தில், சுமங்கலிகள் தாலி மாற்றிக் கொள்வதும்,

திருமணமாகாத குமரிகள் மஞ்சள் கயிறு கட்டிக்கொள்வதும், நோன்பின் பிரதான பகுதி - மஞ்சள் நூலில் டாலர் போல இரண்டு மல்லிகைப் பூவைக் கட்டி - 'நோன்புச் சரடு' - கழுத்தில் ஒன்றும், கையில் ஒன்றும் வீட்டிலுள்ள பெரியவர்கள் கட்டி விடுவார்கள்.

முதல் சரடு அம்மனுக்கு!. வாழை இலை போட்டு, உருகாத வெண்ணையும், வெல்ல அடையும், உப்பு அடையும் வைத்து (வடை வடிவில் இருக்கும் இந்த அடை செய்யத்தான் அந்த அரிசி மாவு அரைக்கும் மஹாத்மியம் வியாசத்தின் முதலில்!), நெய்வேத்தியம் செய்வார்கள் - சரடு கட்டிக்கொள்ளும்போது சொல்லப்படும் வரிகள்: 'உருகாத வெண்ணையும், ஓரடையும், ஒரு நூலும் நூற்று வேண்டுவேன் - ஒருநாளும் என் கணவர் எனைப் பிரியாதிருக்க வேண்டும்' -

எல்லாப் பண்டிகைகளும் பெண்களைச் சுற்றியே இருந்தாலும், இந்த வேண்டுதலால் விசேஷ கவனம் பெறுகிறது காரடையான் நோன்பு!

அம்மா நோன்பு செய்யும் விதமும், சுமங்கலிகளுக்கு செய்யும் பூஜைகளும் என் கண் முன்னே இன்னும் தெரிகின்றன. சத்தியவான் சாவித்திரி கதை மூலம் நோன்பின் காரணம் சொல்வாள்! குறித்த நாளில் தன் கணவன் உயிரை எடுத்துச் செல்லும் யமனுடன் போராடி, மீட்டு வந்ததாகப் புராணக் கதை சொல்கிறது. சாவித்திரியின் புத்திச்சாலித்தனம், விடாமுயற்சி, நம்பிக்கை இவற்றில் மகிழ்ந்த யமன் சத்தியவான் உயிரைத் திருப்பித் தந்ததுடன், பூலோகத்தில் பெண்கள் இந்நோன்பினை அனுசரித்தால் மாங்கல்ய பலம் கூடும் எனவும் வரமளிக்கிறான்!

அடையும் வெண்ணையும் உண்டு, அன்று அம்மாவையும், சகோதரிகளையும், (இன்று மனைவியையும், மகள்களையும்) பார்த்து மகிழ்ந்ததுவும் பசுமையாய் மனதில் இருக்கிறது. இன்று எதற்கும் நேரமில்லை - பண்டிகைகள், பரஸ்பர அன்பு, பாசம், கணவன் மனைவி குடும்பம், எல்லாம் காலத்திற்கேற்ப மாறி விட்டன. மாங்கல்யம் தன் மகிமையை இழக்கிறதோ என்ற ஐயத்தை தினசரி செய்திகள் ஏற்படுத்துகின்றன.

இன்றைய இயந்திர கதியில் சுழலும் வாழ்க்கையில், அன்று மாவரைக்க சுழன்ற யந்திரம் பற்றிய நினைவுகளே இனிமையானவை - அது ஒரு கனாக்காலம்தானே!

டூரிங் டாக்கீஸ் நினைவுகள்!

"டக்கர டக்கர டக்கர டன் டக்கர" சன்னமாகக் கேட்டது தப்பட்டை சத்தம்!

"ஹேய்! சினிமா வண்டி"

கோடியிலிருந்த கிணற்றடியிலிருந்து, ஒற்றையடிப் பாதை, கொல்லைத் தாவாரம், இரண்டு படிகள் (ஒன்று உடைந்தது!) இவற்றை ஒரே எட்டில் தாண்டி, தெற்குத் தாவாரத்தில் சறுக்கியவாறு குனிந்து குட்டை நிலைப்படி, ரேழியைக் கடந்து, இரண்டு திண்ணைகளுக்கிடையே ஓடி, சட்டக் கதவைத் தள்ளித் திறந்து, மூச்சிரைக்க வாசல் வேப்பமரத்தைச் சுற்றிப் புழுதி பறக்க வந்து நின்றால், நாலு வீடு தள்ளி, கழுத்தில் மாலையுடன் இரட்டை மாடுகள் பூட்டப்பட்ட கட்டை வண்டி – இரண்டு வாழைக் கன்றுகள் கட்டப்பட்டு, பக்கத்துக்கு ஒன்றாக இரண்டு பேனர்களுடன் - அசைந்தசைந்து வர எங்கள் ஊரில் புதுப்படம் ரிலீஸ்!

பேனரில் நீலக்கலரில் எழுதப்பட்ட வாசகங்கள்!

'இன்று முதல் இன்னார் (ஏதோ ஒரு திலகம், மன்னன், இலச்சியம் அல்லது பேரொளி பட்டம் நிச்சயம் உண்டு!) நடிக்கும் படம் - சனி / ஞாயிறு மூன்று காட்சிகள் + காலைக் காட்சி ஓர் ஆங்கிலப் படம்!.

கலரில் போஸ்டர்கள் ஒட்டப்பட்டு, தியேட்டரின்

பெயருடன், தெருத் தெருவாக வலம் வரும் அந்த வண்டிக்கு ஊருக்குள் வரவேற்பும், மரியாதையும் அதிகம்! கொஞ்சம் நீளவாட்டத்தில், 'சாணி'த்தாள் வகைப் பேப்பரில், மெல்லிய நீலம், மஞ்சள், ஆரஞ்சு, நஞ்சன்கூடு பல்பொடி கலரில் - 'கொடியிடை, நடை அழகி, பைங்கிளி, கண் அழகி, கனவுக்கன்னி என நடிகைகளின் படங்கள், டைரக்சன், இசை இத்தியாதிகளுடன் காற்றில் வீசியெறியப்படும் நோட்டீசுகள்! தரையில் விழுவதற்கு முன் பிடித்துப் பார்ப்பது அவரவர் திறமைக்கான சவால்!

"இன்றே இப்படம் கடைசி" அறிவுப்புடனும் இதே வண்டிகள் - காய்ந்த வாழைக் கன்றுகளுடன், தப்பட்டை ஒலி குறைவுடனோ அல்லது இல்லாமலோ அமைதியாக வரும்! பூக்களைத் தின்று தீர்த்த நார் மாலை மாடுகளின் கழுத்தில் தொங்கிக் கொண்டிருக்கும்!

அறுபதுகளில், சிதம்பரத்தில் முனிசிபாலிடி பள்ளியில் படிக்கும் காலங்களில் ஸ்ரீமன் நடராஜா கோயிலும், திருவக்குளத்தில் இருந்த அண்ணாமலை யுனிவெர்சிடியும் விட்டால், ஊருக்குள் இருந்த மூன்று சினிமா தியேட்டர்களே மக்களின் புகலிடம்! 'அய்யர் கொட்டா' எனப்படும் நடராஜா தியேட்டர் - பஸ் ஸ்டாண்டுக்கு எதிரில்! 'வடுகனாதன்' எனப்படும் செட்டியார் தியேட்டர் - அந்தப்பக்கம் டவுன் ஹால் எதிரில்! மூன்றாவது, ஊருக்கு வடக்கே, தில்லை காளி கோயில் அருகில், தில்லை டாக்கீஸ் எனும் 'டூரிங்' தியேட்டர். ஆறு மாதத்துக்கு ஒரு முறை லைசென்ஸ் புதுப்பித்து, கீத்துக் கொட்டா இடம் மாற்றிப் போடப்படும் - அதே மைதானத்தில் ஆறு மாதம் வடக்குப் பக்கம், மற்ற ஆறு மாதம் தெற்குப் பக்கம்!

சின்ன டவுன் - இரண்டு அல்லது மூன்று வாரங்கள் ஓடினாலே படம் வெற்றிப்படம்தான்! - ஐம்பது நாட்கள் ஓடிய படங்கள் மெட்ராஸில் (இன்றைய சென்னை) சில்வர் ஜூபிளி கொண்டாடியதற்கு இணையான பெருமை வாய்ந்தவை. சிதம்பரத்தில் ஐம்பதாம் நாள் டிக்கட் கிடைக்காமல், நான் திரும்பி வந்த படம் 'எங்க வீட்டு பிள்ளை'!

அய்யர் கொட்டாயில் சிங்கிள் ப்ரொஜெக்டர் என்பதால், நான்கு இண்டெர்வல் விடுவார்கள் - ரீல் மாற்ற நேரம் வேண்டுமே! இடையே 'சோடேலர்' (சோடா, கலர் என்றறிக!), கைமுறுக்கு, மல்லாட்டை கேக், மீன் மிட்டாய், தேன் மிட்டாய், பொம்மை பிஸ்கட், பீடி, சிகரெட் - கழுத்தில் மாலையாய்த் தொங்கும் அலுமினிய ட்ரேயில் வியாபாரம்! மரக் கைப்பிடியுடன் இரும்புக் கம்பியில் செய்த, பெயர் தெரியாத ஒரு ட்ரே - அதில் ஆறு காளி மார்க் கலர் பாட்டில்கள் ஓப்பனர் விற்பவரின் சட்டைப் பையில்! முன்னால் பெஞ்ச் 35 பைசா, பேக்

பெஞ்ச் 65 பைசா, பின்னால் சேர் ஒண்ணேகால் ரூபாய், கடைசி வரிசை, கை வைத்த சேர்கள் இரண்டு ரூபாய் டிக்கட்! அரங்கின் சைடு வாசல்களில் கருநீல படுதாக்கள், காற்றில் விலக, அவ்வப்போது ஃப்ளாஷ் போல் தெரியும் வெளிச்சம்! மாலை, இரவுக் காட்சிகளில் படுதாக்கள் சுருட்டிக் கட்டப்படும்! இன்றைய சவுண்ட் ப்ரூஃப் தியேட்டர்கள் அன்று இல்லை - இரவின் அமைதியில் சினிமா வசனங்களும், பாடல்களும் ஒரு மைல் விஸ்தீரணத்திற்கு ஊருக்குள் கேட்கும்!

வடுகனாதனும் கிட்டத்தட்ட இப்படியே - ஆனால் டபுள் ப்ரொஜெக்டர், ஒரே இண்டர்வெல்தான்! பால்கனியும், இடைவேளையில் கலர், தின்பண்டங்கள் விற்பனை செய்யும் ஸ்டால்களும் உண்டு! தில்லை டூரிங் டாக்கீஸ் அனுபவம் அலாதியானது! முன் பெஞ்சுக்குப் பதில் மணல் பரப்பிய தரை டிக்கட்! (சுண்ணாம்பில் 'தீ' என்றெழுதிய சிகப்பு நிற பக்கெட்டுகளில், மணல் நிரப்பி முன்னால் தொங்க விட்டிருப்பார்கள் - தீ விபத்து ஏற்பட்டால் தீயணைக்க! தரை டிக்கட் மண் தீயணைக்காதோ என்ற கேள்விக்கு இன்றுவரை எனக்கு விடை தெரியாது!). மணல் மீது துண்டு போட்டு அமர்வது அவரவர் வசதியைப் பொருத்தது - கூட்டமில்லாத நாட்களில், பெட்ஷீட் போட்டு படுத்துக் கொண்டும் படம் பார்க்கலாம்!

தரை டிக்கட் மணற்பரப்பில், ஒரமாய்த் தூங்கிக்கொண்டிருக்கும் சில நாய்கள், படம் ஆரம்பித்தவுடன், சோம்பலாய் எழுந்து, காலைத் தூக்கி சிறுநீர் கழித்துவிட்டு, ஏதோ தப்பித்தாற் போல திடீரென்று ஓடுவதும் உண்டு! தரை டிக்கட்டுக்குப் பின்னால், நடுவில் பெஞ்ச், அதற்கும் பின்னால் சேர் டிக்கட்!

தரை, முன், பேக் பெஞ்சு டிக்கட்டுகளில் மட்டும் இடது புறம் பெண்களும், வலது புறம் ஆண்களும் தனித்தனியாக அமரவேண்டும் - சேர் டிக்கட்டுகளில் சேர்ந்து உட்கார்ந்து படம் பார்க்கலாம். (அனுபவி ராஜா அனுபவி படத்தில் நாகேஷ் மனோரமா டூரிங் டாக்கீஸில் படம் பார்க்கும் சீன் நினைவுக்கு வருகிறதா?) அப்போதெல்லாம் சினிமாவுக்குப் போவதென்பது ஒரு பெரிய மகிழ்வான சடங்கு. என்ன படங்கள் பார்க்கலாம் என்பது முதல் தீவிரமான திட்டமிடல், பெரிய குடும்பங்களில் அவசியம்! (அந்த வயதில் எனக்கு வெண்ணிற ஆடை, சில எம்.ஜி.ஆர் படங்கள் பார்க்க அனுமதி இல்லை!)

காலையிலிருந்தே மாலை டிபன், இரவுச் சாப்பாடு, வீட்டிலிருப்பது யார் போன்றவை உயர்மட்ட அளவில் தீர்மானிக்கப்படும்! அரை மணி நேரம் ஆடை அலங்காரம் - தலையில் ஸ்பெஷல் கதம்பம்! முகத்தில் பெருமையுடன், சிறு நடையாய்த் தியேட்டருக்குச் செல்வது மகிழ்ச்சியானது. கைப்பையில் குடிக்கத் தண்ணீர், பழம், நொறுக்குத் தீனி சகிதம், குட்டி பிக்னிக்! எத்தனைப் படங்கள்

- எவ்வளவு மகிழ்வான தருணங்கள்! அன்றைய படங்கள் நல்லவைகளையே போதித்தன. குடும்பம், பாசம், நட்பு, தர்மம், தியாகம், நல்லவை ஜெயிக்கும், தீயவை தோற்கும் - சமூக அக்கறையுடன் எடுக்கப்பட்ட நல்ல படங்கள். வாழ்க்கையின் எல்லா சந்தர்ப்பங்களிலும் சினிமாவின் தாக்கம் இருந்தே வந்திருக்கிறது.

முதன் முதலில் தனியாய் தியேட்டரில் பார்த்த 'சாது மிரண்டால்' படம் - காரில் பிணத்தைப் பார்த்து நாகேஷ் குதித்து செய்யும் ஸ்லாப்ஸ்டிக் காமெடி, போலீஸ் ஸ்டேஷனில் கையில் சோற்று உருண்டையுடன் அவர் தவிக்கும் தவிப்பு. 'தில்லை டாக்கீஸ்' வெளியிலேயே அமர்ந்து, ஒடையின் சில்லென்ற காற்றோடு, அனுபவித்துக் கேட்ட 'படகோட்டி' பாடல்கள். மாமாவே அனுப்பி வைத்த முதல் நாள் முதல் ஷோ - 'சர்வர்சுந்தரம்'

வடுகனாதனில் முதல் நாள் 'மோட்டார் சுந்தரம்பிள்ளை' டிக்கட் கிடைக்காமல், நடராஜாவில் நான்கு வாரங்களாக ஓடிக்கொண்டிருந்த 'அன்பே வா' சென்றது. சினிமாவும், கண்டிஷன்களும் - நல்ல மார்க், விடுமுறை எல்லாவற்றுக்கும் பரிசு நல்ல சினிமா - தண்டனையும் அதே சினிமாதான், தப்பு செய்தால், மூன்று மாதங்களுக்கு 'நோ சினிமா'!

வேதமும், புரோஹிதமுமே வாழ்வென இருந்த என் தாத்தா பார்த்த இரு படங்கள் - 'கர்ணன், ஔவையார்!' (ஜெமினியில் வேலை பார்த்த அப்பா அனுப்பிய பாஸ் - ஒரு டிக்கட், கூட இருந்ததால் தாத்தா என்னுடன் வந்த படம் 'ஔவையார்'!) அந்த வருடத்துடன், சிதம்பரம் விட்டு மெட்ராஸ் வந்துவிடும் உத்தேசம் - மறுநாள் காலை பத்தரைக்கு டே எக்ஸ்பிரஸ் - முதல் நாள் இரவு மாமாவுடன் அய்யர் கொட்டாயில் பார்த்தபடம் எம் ஜி ஆரின் 'கண்ணன் என் காதலன்'! லைசென்ஸ் முடியும் போது டூரிங் டாக்கீஸில் கடைசியாகத் திரையிடும் படத்தை "வந்தனோபசார" கடைசிப் படம் என விளம்பரம் செய்வார்களாம் - அது போல இந்தக்கட்டுரையின் வந்தனோபசார விபரம்:

அன்று மூன்று தியேட்டர்களில் நூறு நாட்கள் ஒரு படம் ஓடியது. இன்று, நூறு தியேட்டர்களில் மூன்று நாட்கள் மட்டும் ஒரு படம் ஓடுகிறது! ஒருவேளை, ஈக்வேஷன் சரியாகத்தான் இருக்கிறதோ?

இன்று நூறும் இருநூறும் கொடுத்து குளுகுளு அரங்குகளில், முதுகைத் தாங்கித் தாலாட்டும் சோஃபாக்களில், பெப்சி, பாப்கார்ன் காம்போவுடன், ஸ்டீரியோஃபோனிக் சர்ரவுண்ட் சவுண்ட் எஃபெக்டுடன் என்னதான் சொகுசாகப் படம் பார்த்தாலும், அந்த நாளைய படம் பார்த்த சுகமும், மன நிறைவான படங்களும் இப்போது இல்லையென்றே தோன்றுகின்றது!